**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) – 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்குதல் – ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.170 நாள் 22.7.2011.

ஆடி 6

திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டவை:–

1. திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழக பதிவாளரின் கடித எண்.026152/E6/2011 நாள் 19.7.2011.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்.1036/க்யூ2/2011–2, நாள் 20.7.2011.

---------

**ஆணை:–**

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்'' தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஆகிய இரண்டு இடங்களில் தலா ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியாக ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்” என்ற செய்தி 18.7.2011 அன்று வெளியிடப்பட்டது.

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பகுதியில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியை பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியாக 2011–12ஆம் கல்வி ஆண்டில் தொடங்கி நடத்துவதற்கு ஏதுவாக கீழ்க்கண்டவாறு அரசின் ஒப்பளிப்பினை கோரியுள்ளார்:-

அ) பாடப்பிரிவுகளின் விவரம்

1. இளங்கலை ஆங்கிலம் (B.A. English)
2. இளமறிவியல் கணிதம் (B.Sc Mathematics)
3. இளங்கலை வணிகவியல் (B.Com)
4. இளங்கலை வணிக நிர்வாகவியல் (B.B.A.)

ஆ) <u>தேவைப்படும் பணியிடங்கள்:-</u>

**ஆசிரியர் பணியிடங்கள்:-**

| வ.எண். | பணியிடங்களின் விவரம் | சம்பள விகிதம் ரூ. | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல்வர் | ரூ.37,400 – ரூ.67,000+AGP ரூ.10,000+Special Allowance ரூ.2,000/– | 01 |
| 2. | உதவிப்பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 08 |
| 3. | மொழி பாடங்களுக்கான உதவிப்பேராசிரியர்கள் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 02 |
| 4. | உடற்கல்வி இயக்குநர் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 01 |
| 5. | நூலகர் | ரூ.15,600–39,100+AGP ரூ.6000 | 01 |
| | மொத்தம் | | 13 |
| | **<u>ஆசிரியரல்லாத பணியிடங்கள்:-</u>** | | |
| 1. | நிதியாளர் | ரூ.15,600–39,100+ GP ரூ.5400 | 01 |
| 2. | கண்காணிப்பாளர் | ரூ.9,300–34,800+ GP ரூ.4800 | 01 |
| 3. | உதவியாளர் | ரூ.5,200–20,200+ GP ரூ.2800 | 02 |
| 4. | இளநிலை உதவியாளர் | ரூ.5,200–20,200+ GP ரூ.2400 | 02 |
| 5. | கணினி இயக்குபவர் | ரூ.9,300–34,800+ GP ரூ.4200 | 01 |
| 6. | நூலக உதவியாளர் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 01 |
| 7. | அடிப்படை பணியாளர்கள் | ரூ.4,800–10,000+ GP ரூ.1300 | 09 |
| | மொத்தம் | | 17 |
| | | பெரு மொத்தம் | 30 |

இ) மேற்படி கல்லூரிக்கான தொடரும் மற்றும் தொடராச் செலவின விவரங்கள் கீழ்வருமாறு:-

**i) <u>தொடரா செலவினம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு | ரூ.4,00,00,000/– (ரூபாய் நான்கு கோடி மட்டும்) |
| 2. | மரத்தளவாடங்கள் | ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம் மட்டும்) |
| 3. | புத்தகம் மற்றும் பருவ இதழ்கள், நாளிதழ்கள் | ரூ.10,00,000/– (பத்து இலட்சம் மட்டும்) |
| 4. | இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் | ரூ.5,00,000/– (ஐந்து இலட்சம் மட்டும்) |
| 5. | கணிப்பொறிகள் (25 எண்ணிக்கை) மற்றும் சார்ந்த உபகரணங்கள் | ரூ.8,95,000/– (எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) |
| | மொத்தம் | ரூ.4,28,95,000/– |

**ii) <u>தொடரும் செலவினம் (ஆண்டொன்றுக்கு):-</u>**

| | | |
|---|---|---|
| 1. | பணியாளர் செலவுகள் | ரூ.84,07,800 |
| 2. | அலுவலகச் செலவுகள் | ரூ. 50,000 |
| | மொத்தம் | ரூ.84,57,800 |

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை (இருபாலர்) தொடங்கிட முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) திருவாரூர் மாவட்டம் நன்னிலம் பகுதியில், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை (இருபாலர்) 2011–12ம் கல்வியாண்டு முதல் (1) இளங்கலை ஆங்கிலம் (B.A. English) (2) இளமறிவியல் கணிதம் (B.Sc Mathematics) (3) இளநிலை வணிகவியல் (B.Com) (4) இளநிலை வணிக நிருவாகவியல் (B.B.A.) ஆகிய நான்கு பாடப்பிரிவுகளுடன் துவக்கிட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ii) இக்கல்லூரிக்கு ரூ.4 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்) மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) அ) தொடரா செலவினமாக மரத்தளவாடங்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், புத்தகம் மற்றும் பருவ நாளிதழ்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்கிட ரூ.5 இலட்சம், 25 கணிப்பொறிகள் மற்றும் சார்ந்த உபகரணங்கள் வாங்கிட ரூ.8.95 இலட்சம் ஆக மொத்தம் ரூ.23.95 இலட்சம் (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

ஆ) மேலே பத்தி 2(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஆண்டொன்றிற்கு ரூ.84.08 இலட்சம் (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) தொடர் செலவில் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

இ) அலுவலகச் செலவிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iv) கல்லூரிக்கான தொடர் செலவினம் முதல் ஐந்தாண்டுகளுக்கு மட்டும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். ஐந்தாண்டுகளுக்குப் பின் அச்செலவினம் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2202 பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 102. பல்கலைக்கழகங்களுக்கு நிதிஉதவி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத்திட்டம் – JT. பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி – 09. உதவித் தொகைகள் 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகைகள்.
(கு.தொ.கு. 2202 03 102 JT 0917)

02. மூலதனச் செலவுக்கான உதவித் தொகை
(2202 03 102 JT 0926)

5. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவாக கருதப்பட்டு சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு ஒப்புதல் பெறப்படும்வரை இச்செலவினம் முதற்கண் தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியின் முன்பணம்

மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணை இவ்வாணையின் படியுடன் பெறப்படும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் விண்ணப்பத்தின் அடிப்படையில், நிதி (வ.செ.பொ.I) துறையால் வெளியிடப்படும்.

6. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கல்லூரிக்கான உடனடி செலவினை நிர்ணயித்து அதற்கான எதிர்பாரா செலவு நிதி முன்பணத்தை பெற்று அதனை திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கல்லூரியை தொடங்கி நடத்துவதற்கான செலவினை மேற்கொண்டு அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ்களை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும், அரசுக்கும் அனுப்பி வைக்குமாறு திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.35158/மைம.ஆ.பி/2011, நாள் 22.7.2011–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.295 (இருநூற்று தொண்ணூற்று ஐந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி.

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி .I / வ.செ.பொது. I / வ.செ.பொது. II) துறை, சென்னை-9.
உயர்கல்வி (ஏ, டி, எப், எச்) துறை, சென்னை -9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

அரசு சார்புச் செயலாளர்